**தலைப்பு : 319 சப்ரகமுவ மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

1. **தூரநோக்கு, செயற்பணி மற்றும் செயற்பாடுகள்**

## 1.1 தூரநோக்கு

நிகரற்ற சப்ரகமுவவிற்கு

## 1.2 செயற்பணி

சப்ரகமுவ மக்களின் அபிவிருத்திக்காக சகல வளங்களையும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் சப்ரகமுவவின் வெற்றிப் பயணத்திற்கு.

## 1.3 செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல்.

# 2. கணக்குகள்

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

சப்ரகமுவ மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 22,003,408,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் ரூபா 18,881,336,207 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 3,122,071,793 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 14.19 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 17,423,408,000 | 14,809,408,000 | 2,614,000,000 | 15 |
| மூலதனம் | 4,580,000,000 | 4,071,928,207 | 508,071,793 | 11.09 |
| மொத்தம் | 22,003,408,000 | 18,881,336,207 | 3,122,071,793 | 14.19 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.